செ.வெ.எண்-07 நாள்-02.09.2021

# அரியலூர் மாவட்டம்
# தேசிய ஊட்டச்சத்து மாதத்தை முன்னிட்டு ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் சார்பில் தேசிய ஊட்டச்சத்து மாதத்தை முன்னிட்டு ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் 01.09.2021 அன்று நடைபெற்றது

**இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது,**

இந்தியாவில் 6-வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப்பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலையை முன்னேற்றுவதற்காக பிரதமரின் ஊட்டச்சத்து ஒருங்கிணைப்புத் திட்டம் (Poshan Abhiyaan) 2017-18ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில், செப்டம்பர் 1 மதல் 30 தேதி வரை தேசிய ஊட்டச்சத்து மாதமாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது. நடப்பு ஆண்டு 4-வது தேசிய ஊட்டச்சத்து மாதமாக கொண்டாடப்படுகிறது.

இந்த திட்டத்தின் நோக்கமானது, கர்ப்பணக்கால வளர்ச்சி நிலைகள் மற்றும் குழந்தை பிறந்த முதல் 1000 நாட்கள் மற்றும் பல்வேறு திட்டங்கள் மூலம் பிரசவத்திற்கு முந்தைய நாட்களில் தாய்மார்களுக்கு வழங்க வேண்டிய பல்வேறு ஊட்டச்சத்துக்கள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல், தேசிய அளவில் 2022-க்குள் குள்ளத்தன்மையை 38.4 சதவீத்ததிலிருந்து 25 சதவிதமாக குறைத்தல், மெலிந்த உடல் மற்றும் இரத்த சோகை ஆகிய குறைபாடுகள் உடைய குழந்தைகளை கண்டறிந்து முறையான ஊட்டச்சத்து கிடைக்க செய்வது மற்றும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டத்தினை அங்கன்வாடி பணியாளர்கள் மூலமாக இம்மாதம் முழுவதும் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளனர். எனவே, ஊட்டச்சத்து அவசியம் குறித்து பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒருங்கிணைந்த குழு உறுப்பினர் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து, தேசிய ஊட்டச்சத்து மாத உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக்கொண்டனர்.

இக்கூட்டத்தில், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) திரு.சு.சுந்தர்ராஜன், திட்ட அலுவலர் (தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம்) திரு.எம்.சிவக்குமார், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.சந்தானம், துணை இயக்குநர் (சுகாதாரப்பணிகள்) திருமதி.எம்.கீதாராணி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.எம்.இராமன், துணை இயக்குநர் (தோட்டக்கலைத்துறை) திரு.ஆனந்தன், மாவட்ட குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் திருமதி.என்.சாவித்ரி, போஷன் அபியான் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.பாலசுப்பிரமணியன், மாவட்ட திட்ட உதவியாளர் திரு.அ.சரவணன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**